IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No.360/2021**

**நாள்– 14.12.2022**

**இசக்கிமுத்து**

**ம.சா.1** சாட்சி இன்று மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மறு விசாரணைக்காக அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>மறுவிசாரணை</u>**

விபத்தில் இறந்துபோன சுப்பிரமணியனின் பிரேதக்கூராய்வு அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.7 ஆகும். டிஎன் 72 பிஜே 8347 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.8 ஆகும். டிஎன் 76 கே 9092 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.9 ஆகும். சம்பவ இடம் பற்றி மாதிரி வரைபடத்தின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.10 ஆகும். சம்பவ இடம் பற்றி பார்வை மகஜரின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.11 ஆகும். மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் தாக்கல் செய்திருக்கும் ம.சா.ஆ.8, 9 ஆவணங்களில் விபத்து சம்பந்தப்பட்ட 2 வாகனங்களுக்குரிய காப்பீடு பற்றி விபரங்கள் கூறவில்லை என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையை அனுசரித்து வாகனத்தின் உரிமையாளருக்கும்அதன் ஓட்டுநருக்கும் பாலிசி விபரங்கள் கேட்டு சட்ட அறிவிப்பு எதுவும் நான் அனுப்பவில்லை. விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு முறையான காப்பீடு இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**